[1983 பிப்ரவரி 5]

4. அறிக்கை அளித்தல்

விதி 107 (1)ன்கீழ் திருத்த அறிக்கை

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 20-3-82 ஆம் நாள் சட்டமன்றப் பேரவை வினா (புதிய எண். 582, பழைய எண். 10076) விற்கு பதிலளிக்கையில் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் எழுப்பியதுணை வினாவிற்கு கீழ்கண்டவாறு பதிலளித்தேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழகுபடுத்தும் திட்டத்தின்கீழ் 25, 86, 200ரூபாய்க்கு இப்போதுள்ள மதிப்பீட்டில் அழகுபடுத்துவதாக இருக்கிறது. அதில் ஒப்பன் ஏர் தியேட்டர்திறந்த வெளி திரை அரங்கத்திற்கு 3, 15, 000 ரூபாய் மதிப்பீட்டிலே செலவிடுவதாக இருக்கிறது.

மேற் கூறியவற்றிற்குப் பதிலாக கீழ்க்கண்டவாறு எனது பதிலை திருத்திக்கொள்ள விழைகிறேன்.

சீரணி அரங்கத்திலிருந்து வெளியே செல்ல மணலின் நிறத்தோடு பொருந்தும் நிறத்தில் சிமின்ட் கான்கிரிட் சாலை அமைப்பதற்கு ரூபாய் 1,10,000 க்கும், கடற்கரை மணற் பரப்பில் அழகிய வடிவமைப்புடன் கூடிய குப்பைத் தொட்டிகளை வைக்க ரூபாய் 8,500 க்கும் மதிப்பீடுகள் அரசின் பரிசீலனையில் உள்ளது. மற்றத் திட்டங்களுக்குத் தேவையான மதிப்பீடுகள் இன்னும் கட்டிடத் தலைமை பொறியாளரிடமிருந்து வரவில்லை. திறந்தவெளி கலையரங்கம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை. அதற்குப் பதிலாக சீரணி அரங்கத்திலேயே கல்வி சம்பந்தப்பட்ட படக்காட்சிகளும் கார்டூன் படக்காட்சிகளும் காட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்

கவன ஈர்ப்புகள்

(அ) சோத்துக்கண்ணிக்கு தனி பாடசாலை

திரு. பெ. சு. திருவேங்கடம் பேரவைத தலைவர் அவர்களே வட ஆற்காடு கலசபாக்கம் தொகுதி, சேத்துப்பட்டு ஒன்றியம் சோத்துக்கண்ணி கிராம மக்கள் தனியாக பாடசாலை கோரி, படிக்கும் பிள்ளைகளை நிறுத்தி விட்டதால், 6 மாத காலமாக 100க்கு மேற்பட்ட குழந்தைகளின் கல்வியும் மதிய உணவும் பாதிக்கப்பட்டுள்ள நிலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கலசபாக்கம் தொகுதி, சேதுப்பட்டு ஒன்றியம் சோத்துக்கண்ணி கிராமத்தில் தனியாக பாடசாலை துவங்குவது குறித்து கருத்துருக்களோ பிள்ளைகளை 1 மாத காலமாக நிறுத்தி இருப்பது குறித்த தகவல்களோ இதுவரை கல்வித் துறையினரால் பெறப்படவில்லை. மேற்கண்ட கிராமத்தில் ஆரம்பப்பள்ளி துவங்குவதற்கான கோரிக்கை 1982-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஊர் பொதுமக்களால் அனுப்பப்பட்டுள்ளது. கோரிக்கை மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட முதன்மை கல்வி அலுவலருக்கு உடனடியாக அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. பள்ளி துவங்குவதற்கான கருத்துக்கள் பெறப்பட்டவுடன் சோத்துக்கண்ணி கிராமத்தில் புதிய ஆரம்பப்பள்ளி துவங்குவது குறித்து உடனடியாக பரிசீலனை செய்து ஆணை வழங்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த சோத்துக்கண்ணி கிராமம், நெடுவிளாபாக்கம் என்ற கிராமத்தில் தனியாருடைய மேனேஜ்மெண்டு பள்ளிகள் இருந்து வந்தன. அந்த பள்ளிகளை நானே முன்நின்று அந்த மேனேஜ்மெண்டார் கட்டிடம் கட்டித்தரமுடியாத அபாய சூழ்நிலை இருந்தன. அதனால் அரசுக்கு அந்த பள்ளியை எழுதி கொடுத்து விட்டார்கள். பிறகு 2 கிராமத்திற்கும் தனித்தனியாக பள்ளிகள் வேண்டும் என்று சொல்லிஇதைசோத்துக்கண்ணி கிராமத்தில் 100பிள்ளைகளை நிறுத்தி விட்டார்கள். நான் மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டத்தில் இதுபற்றி சொல்லியிருக்கிறேன். முதன்மை கல்வி அலுவலர், வட ஆற்காடு மாவட்டத்திற்கும் இந்த கோரிக்கை கொடுக்கப்பட்டுள்ளன. திருவண்ணாமலை மாவட்ட கல்வி அதிகாரி அவர்களிடத்திலும் இந்த கோரிக்கை கொடுக்கப்பட்டது. இந்த பள்ளி இறுதி ஆண்டு வரையில் தனியாக வேண்டுமானால் இங்கே 2 வகுப்புகள், அங்கே 2 வகுப்புகள் வைக்கலாம் என்ற ஆலோசனையை கொடுத்தேன். ஆனால் கல்வி இலாகா எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு இந்த 2, 3 மாத காலத்திற்கு தனியாக இங்கே 2 வகுப்புகள் அங்கே 2 வகுப்புகள் வைத்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பிறகு அடுத்த கல்வி துவக்க ஆண்டில் தனியாக பள்ளி ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தக்க நடவடிக்கை எடுக்குமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். ஆகவே அதைப் பற்றி விசாரித்து தேவையான நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு கல்வி இலாகா இந்த விவரம் வரவில்லை என்ற தவறான தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே மாவட்ட கல்வி அதிகாரி, முதன்மை கல்வி அதிகாரி, இவர்களுக்கு எல்லாம் இந்த தகவல் தெரியுமே. இப்படிப் பட்ட தவறான தகவல் கொடுத்து இருப்பது பற்றி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா என்று நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 10.20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத்தரப்பட்ட தகவல் தவறானதாக இருக்குமானால் தரப்பட்ட அதிகாரி மீது நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றை கூறிக்கொள்ள விரும்புகிறேன். பள்ளிக்கூடம் ஆரம்பிப்பது என்றால் மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் பேசுவது என்பது சரியான முறை ஆகாது, ஆகவே அங்கேயிருக்கின்ற மக்களிடம் கமிட்டி போட்டு அதற்கு தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டுமே தவிர மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டத்தில் பேசுவது அல்லது கலெக்டர் இடத்திலே பெட்டிஷன் கொடுப்பது இவை எல்லாம் முறை அல்ல.

(ஆ) கோவை மாவட்டத்தில் ஆலைகள் மூடல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஆர். மணிமாறன், எம். ஆறுமுகம், என். ஏ. பூங்காவனம், ஏ. டி. குலசேகர், அ. ரகுமான்கான், மா. சின்னராசு, கோவைத் தம்பி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

திரு. ஆர். மணிமாறன்: தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம் எஸ் ஆர். சி. மில், ஜோதி மில், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், காளப்பட்டி பத்மா மில், சிறுமுகை விஸ்கோஸ் மற்றும் பிரிமியர் மில்ஸ் ஆகிய தொழிற்சாலைகள் பல மாதங்களாக மூடிக் கிடப்பதால் தொழிலாளர்கள் படும் இன்னல் குறித்து" அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.